# ஒன்றியப் பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த மோடி அரசைக் கண்டித்து கழகம் நடத்திய பொதுக்கூட்டங்கள்!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் உத்திரமேரூரில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன் வரவேற்றுப் பேசினார். மாவட்ட நிர்வாகிகள் இனியரசு, கோகுலக்கண்ணன், மலர்விழி குமார், ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் சசிகுமார், ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஹேமலதா ஞான சேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மோடி அரசுக்கு எதிராக கண்டன உரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் எம்.பி. க.செல்வம், முன்னாள் எம்.எல்.ஏ. ஆர்.டி.அரசு, மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நாராயணன், சுகுமார், அன்பழகன், சுகுமார், ராமகிருஷ்ணன், சுந்தர வரதன், மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர் டி. குமார், குமணன், பி.சேகர், பி.எம்.குமார், எம்.எஸ்.பாபு, கண்ணன், ஜி.தம்பு, பி.எச்.சத்யசாய், பொன். சிவக்குமார், கே.எஸ்.ராமச்சந்திரன், ஏழுமலை, இ.சரவணன் ஏ.சிற்றரசு, பேரூர் செயலாளர் பாரிவள்ளல் மற்றும் பலர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கொளத்தூரில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த மோடி அரசை கண்டித்து பகுதி செயலாளர் எ.நாகராஜன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக பேச்சாளர்கள் மனுஷ்ய புத்திரன், உடுமலை தண்டபாணி ஆகியோர் கண்டன உரையாற்றினர். உடன் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் ப.ரங்கநாதன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, மகேஷ்குமார், கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார் மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், புனிதவதி எத்திராஜன், ஜி.எம்.தேவன், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி. ராஜகோபால், சொ.வேலு, வி.சுதாகர், எஸ். முரளி உள்ளிட்ட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பி.அதிபதி, எம்.ஜெ.சி.பாபு நன்றி கூறினர்.



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கைகள் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்து வஞ்சித்த பாசிச பாஜக மோடி அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. பகுதி செயலாளர்கள் வினோத் வேலாயுதம் மா.பா.அன்புதுரை, வரவேற்றனர். மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, ஐ. கென்னடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர், எம் கே மோகன் எம்எல்ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் இறுதியாக வட்டச் செயலாளர்கள். வரதை த.பரி,மு.மோகன் மாமன்ற உறுப்பினர் எலிசபெத் அகஸ்டின் பாபு ஆகியோர் நன்றி கூறினர். இதில் மாவட்ட, பகுதி, நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட த.மு.க. சார்பில், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் ஆழ்வார்பேட்டை 123 வது வட்டம் சீத்தாம்மாள் காலனியில் நடந்தது. இதில், தயாநிதிமாறன் எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் எம்எல்ஏக்கள் மயிலை த.வேலு, ஜெ.கருணாநிதி, கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் நந்தனம் மதி, ஏழுமலை, முரளி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் ஒன்றிய மோடி அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளரும்,வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், தலைமைக் கழக பேச்சாளர் குத்தாலம்கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் கண்டனப் பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு, தலைமைக் கழக பேச்சாளர் நாகம்மை கருப்பையா ஆகியோர் ஒன்றிய பா.ஜக அரசுக்கு எதிராக கண்டன உரையாற்றினர். உடன் ம.ஜெயச்சந்திரன், வரவேறார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், இரா.ஜனகராஜ், டி.என்.முருகன், தயா இளந்திரையன், இரா.கற்பகம், எம் தேன்மொழி, சுவை.சுரேஷ், மு.தங்கம் உள்ளிட்ட செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள், அணி நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் , ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். நகரச் செயலாளர் இரா.சக்கரை நன்றி கூறினார்.



ஒன்றிய நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிராக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் செங்கல்பட்டில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன், கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். உடன் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன் மற்றும் து.மூர்த்தி, வெ.விசுவநாதன், மேயர் வசந்தகுமாரி, எஸ்.நரேந்திரன். க.அன்புச்செல்வன், தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசை கண்டித்து மதுரை செல்லூரில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவரும் திமுக கொள்கை பரப்புச் செயலாளருமான திண்டுக்கல் ஐ லியோனி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். மேயர் இந்திராணி பொன் வசந்த், மகளிர் அணி செயலாளர் சரவண புவனேஸ்வரி, மாநகர திமுக நிர்வாகிகள் குழந்தைவேலு வேலுச்சாமி ஒச்சுபாலு ஜெயராம் அக்ரி கணேசன் வட்டக் கழகச் செயலாளர் கருப்பு ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.